1974 மார்ச் 25]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஏற்றுமதி இறக்குமதி வசதிகளுக்கும் மற்றும் மீன்பிடி வசதிக்கும் பல துறைமுகங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட வேண்டும். அதாவது சென்னையில் ஒரு பெரிய துறைமுகத்தை அமைக்கவேண்டுமென்று 5, 6 ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. அது இன்னும் செயல்படுத்தப்படவில்லை. அதைப்போலவே எண்ணூரில் இருந்த பதப்படுத்தும் நிலையமும் சரியாகச் செயல்படவில்லை. இவைகளைச் சரியாக செயல்பட வைத்தால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சென்னைத் துறைமுகத் திட்டத்தை பூனுவுக்கு அனுப்பினேம். அவர்கள் டிசைன் சரியில்லை என்று திருப்பித் திருப்பி அனுப்பிவிட்டு, இப்போது ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு கட்டடங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இப்போது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எண்ணூரில் 'ஃபிரீசிங் பிளான்ட்' தனியாரிடம் இருந்தது. அவர்கள் சொந்தச் செலவில் சில இயந்திரங்களை வாங்கி வைத்திருந்தார்கள். அவர்களுடைய ஒப்பந்தம் ரத்தான பிறகு, அவர்களுடைய இயந்திரங்களைக் கொண்டுபோய் விட்டார்கள். வேறு யாரும் அதை ஏற்று நடத்த முன்வரவில்லை. ஆனுல் இப்போது டயரி கார்ப்பரேஷன் அதை பதப்படுத்தும் நிலையமாக மாற்றிக்கொள்கிறேம் என்று கேட்டார்கள். இந்தத் துறை அந்தத் துறைக்கு 1,20,000 ரூபாய்க்கு லீசுக்கு விட்டிருக்கிறது.

ஒட்டப்பிடாரம் துணை வட்ட அலுவலகக் கட்டடம்

* 600 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் தாலுகா ஆபீசிற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஒட்டப்பிடாரத்தில் உப தாலுக்காத்தான் இருக்கிறது. அதன் அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ரூ. 95,000 செலவு செய்துகொள்ளும்படி வருவாய்த் துறையின் 30—5—1973 தேதியிட்ட அரசாணை எண். 3053-ல் அனுமதியளிக்கப்பெற்றுள்ளது.